# கார்ல் மார்க்சுக்குச் சிலை: முதல்வர் ஸ்டாலினின் பேரறிவிப்பு!

கார்ல் மார்க்சுக்குச் சிலை வைப்பது குறித்து தோழர் முத்தரசன் ஜனசக்தியிலே (மே 11-17) 'தன்னிகரில்லா பேரறிஞருக்குத் தலைநகரிலே சிலை' என்று தலைப்பிட்டுத் தம் தோழர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். கார்ல் மார்க்சைத் தத்துவஞானி என்றோ, மெய்ஞானி என்றோ அவர் அதில் குறிப்பிடவில்லை.

'தத்துவஞானி' 'மெய்ஞானி' என்று குறிப்பிட்டால் அது கீழ் நாட்டுத் தத்துவ இயலின் வழிகாட்டிகளுக்குப் பெரும்பாலும் அத்தகைய அடைமொழிகளைச் சேர்த்து விடுகிறார்கள். தோழர் முத்தரசன் மாமேதையைத் தனித்துக் காட்டியது சிறப்புக்குரியதாகும். அவரை இன்னும் சிறந்த அடைமொழிகளால் தெரிந்தெடுத்துப் பாராட்ட வேண்டும். அத்தகைய அகன்றாழ்ந்த ஒட்பம் உடையவர்.

இப்படித் தோழர் முத்தரசன் எழுதுவதற்குக் காரணம் முதல்வர் மு.க.ஸ்டாலினின் கார்ல் மார்க்சு சிலை வைப்பு பேரறிவிப்புதான். முதல்வர் ஸ்டாலின் வாழையடி வாழையென வந்த தொரு திருக்கூட்டத்தைச் சேர்ந்தவர். அதாவது பொதுமை நாட்டமுள்ள கொள்கையினர் வழி உடையவர் ஸ்டாலின். அதனை இங்கே சில வரிகளில் சொல்ல விரும்புகின்றோம்.

கம்யூனிஸ்ட் அறிக்கையின் ஒரு சில பகுதிகளைப் பெரியாரின் குடிஅரசு முதன் முதலில் தமிழில் வழங்கியது. இதே கால கட்டத்தில் மதமும் லெனினும் வெளியாயிற்று. பெரியார் பிரிட்டிஷார் கலங்கும் அளவுக்குப் பொதுவுடைமைப் பிரச்சாரத்தைச் செய்தார்.

ஒரு கட்டத்தில் பொதுவுடைமைக் கொள்கைக் கொண்ட தென்னிந்தியர் சமதர்மக் கட்சி எனும் அமைப்பைத் தொடங்கும் அளவுக்குப் பெரியார் சென்றார். பெரியாரின் முழக்கம் 'புரட்சி பொங்குக; பொதுவுடைமை ஓங்குக!' (குடி அரசு 18.12.1932) என்பதாகப் பதிவுகள் பேசுகின்றன.

அறிஞர் அண்ணாவோ தம் கல்லூரி நாள்களிலேயே மார்க்சைப் பயின்று இருந்தார். அவர் மாக்சியத்தைப் பயின்று கொண்டிருந்தார் என்பதை மூன்று புள்ளிகளில் சொல்ல விரும்புகின்றோம். அவர் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் தமிழாக்கத்தின் பகுதிகளில் உள்ள புள்ளிகள் இவை.

**(1) "பொதுவுடைமை என்பது லெனினிசம், லெனினிசம் என்பது மார்க்சிசத்தின் செயல்வடிவம். செயலில் இறங்காமல், அறிவுரை மட்டுமே வழங்கும் வாய்ச்சொல் வீரர்கள் வேண்டுமானால் - மார்க்சை ஒரு கனவு காணும் அரசியல்வாதி என்றும் கேடு விளைவிக்கும் பொருளாதாரவாதி என்றும் வர்ணிக்கலாம். சிலர் அவரைப் புரட்சியின் மொத்த உருவம் என்கின்றனர், உழைப்பவர் உலகமோ அவரைப் புனிதத்தன்மை உடையவர் என்கிறது அவரது "மூலதனம்" என்கிற படைப்பும் "பொதுவுடைமை அறிக்கை" என்கிற படைப்பும் பாட்டாளி மக்களுக்கான இரண்டு வழிகாட்டு ஆவணங்கள்.** மார்க்சின் இந்த இனிய நம்பிக்கையூட்டும் கீதத்தை மீண்டும் மீண்டும் கேட்டுத் தொழிலாளி பித்தனாகி விட்டான். அது அவனைப் பூதாகரமாக உருவெடுக்க வைத்து தாண்டவமாட வைத்தது. அவன் முதலாளித்துவம் என்கிற கொடூரனை முறியடித்தான்."



(2) "கார்ல் மார்க்சு முதலாளித்துவத்தின் தீமைகள் பற்றிய பயங்கரமான தெளிவான உண்மைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். **ஜீன் ஜேக்கு ரூசோவின் "சமூக உடன்படிக்கை"** எவ்வாறு விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்கிற கோட்பாட்டிற்கு வழிவகுத்ததோ, அதே போன்று மார்க்சின் **"மூலதனம்"** வழிவகுத்த 'மிகுதிமதிப்பு' என்கிற கருத்தியல் திட்டம் பல்வகையான சமதருமம் மலர்ந்திட முக்கிய ஆதாரமாக உள்ளது. மார்க்சு ஒன்றும் இல்லாததற்குப் புகழ் அடைந்து விடவில்லை."

**(3) "நிலம் - உழைப்பு - மூலதனம் மற்றும் அமைப்பாண்மை ஆகிய நான்கும் உற்பத்தியின் இயக்கிகள் என்று அனைத்து அடிப்படைப் பொருளாதார நூல்களும் நமக்கு உணர்த்துகின்றன. உற்பத்திக்கு உழைப்பு எந்த அளவுக்குக் கட்டாயத் தேவையோ, அதே அளவுக்கு மூலதனமும் கட்டாயத் தேவை என்பது உண்மைதான். ஆனால் இவற்றில் எது அதிக முக்கியத்துவம் பெறத் தகுதி படைத்தது என்பது தான் சிக்கல்."**

இப்படி அறிஞர் அண்ணா தமது கல்லூரி நாள்களில் எழுதிய கட்டுரையில் பொதுவுடைமையைப் பற்றி எழுதியுள்ளதை மேலே சிலவற்றை தந்து இருக்கின்றோம்.

அறிஞர் அண்ணா திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்தபோது அவர் நடத்தி வந்த திராவிட நாடு இதழில் (09.11.1947)

(?) கம்யூனிஸ்ட் ஜீவாவோடு நீங்கள் ஏன் ஒத்துழைக்கிறீர்கள்?

**பதில்:- அவருடன் அல்ல, அவரும் அவரது கட்சியும் கூறி வரும் பொருளாதாரக் கோட்பாடுகள் திராவிடர் கழகத்தாருக்கு உடன்பாடு. ஆகவே அந்தக் கோட்பாடுகளைப் பொறுத்தவரையிலே ஆதரவு காட்டுகிறோம்** - என்று கூறியிருக்கிறார்.

அறிஞர் அண்ணா இருக்கும் வரையும் பொதுடைமைக் கருத்துக்கு ஆதரவாகத்தான் இருந்து வந்தார். அது குறித்து பல செய்திகளைப் பதிவானவற்றிலிருந்தே சொல்லலாம்.

பொதுவுடைமைக் கொள்கையை முதன் முதலில் தென்னிந்தியாவில் பரப்பிய சிங்கார வேலரைச் **'சிந்தனைச் சிற்பி'** என எழுதி சிறப்பித்தார், அறிஞர் அண்ணா.

கலைஞர், "நான் பெரியார், அண்ணா ஆகியோரின் அறிவார்ந்த மேடைப்பேச்சுகளைக் கேட்காமலும் அவர்களைச் சந்திக்காமலும் இருந்திருந்தால் - நான் ஒரு கம்யூனிஸ்ட் ஆகியிருப்பேன்" என்று பேசினார்.

கார்ல் மார்க்சின் 'கேப்பிடலை' தமிழில் மொழிபெயர்க்க கலைஞரின் தி.மு.க. அரசு ரூ. 5 இலட்சம் நன்கொடையாக வழங்கியது. ஜமதக்னி அதைத் தமிழில் முழுவதுமாக மொழி பெயர்த்தார். இந்திய மொழிகளிலேயே தமிழில் தான் 'கேப்பிடல்' 'மூலதனம்' எனும் தலைப்பில் வெளியாயிற்று. இதற்குப் பெரிதும் உறுதுணையாக இருந்தவர் கலைஞர்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் பல பாடல்கள் பொதுவுடைமைக் கொள்கையின் கருத்தை வெளிப்படுத்தி இருக்கின்றன. ஜனசக்திக்கு என்று 1937இல் பாடல் புனைந்து வழங்கியவர் பாரதிதாசன். ஒரு கவிதையில் **'பொதுவுடைமைக்குப் பகைவனா?-நான்!'** என்று கேட்டு இருப்பார்.

இப்படித் திராவிட இயக்கம் பொதுவுடைமைக் கொள்கையை முன்னெடுத்துச் செல்வதற்குக் காரணமாக இருந்து இருக்கிறது.

**இந்த வரிசையைத் தொடர்ந்து நமக்கு ஸ்டாலின் கிடைத்து இருக்கிறார். அந்த வரிசை மாறாமல் முதல்வராக இருந்து சட்டமன்றத்தில் கார்ல் மார்க்சுக்கு சிலை வைக்கப்படும் என்று பேரறிவிப்பு செய்து இருக்கிறார். திராவிட இயக்க மரபு அப்படி -அதை ஸ்டாலின் செயலின் மூலம் எடுத்துக் காட்டி இருக்கிறார். இந்த அறிவிப்பினால் அவரின் உயரம் மேலும் அதிகமாயிற்று.**



**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்

கார்ல் மார்க்சுக்கு எங்கே சிலை வைக்கிறார்கள்? கன்னிமாரா நூலகத்தின் முன்பு; மிக பொருத்தமான இடம். மிக அருமையான இடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்வு செய்து இருக்கிறார். அவரை நாம் பாராட்டுகின்றோம். நன்றிகளைக் குவிக்கின்றோம். 'சல்யூட்' செய்கின்றோம்.

இலண்டன் நூலகத்தின் இருண்ட அறைகளிலே அமர்ந்து எல்லா ஏடுகளையும் புரட்டிப் பார்த்து படித்து விஞ்ஞானப் பூர்வமான முடிவை வெளியிட்டவர் அவர்.

**'உலகைப் புரிந்து கொள்வது மட்டும் சிந்தனையாளனின் பணி இல்லை. உலகை மாற்றி அமைப்பதும் அவனது பணியே'** எனப் புது நெறியை உலகுக்கு உணர்த்தியவர் அவர். ஆகவே பெரும் படிப்பாளியும் மேதையுமான கார்ல் மர்க்சு சிலை எழும்பூர் கன்னிமாரா நூலகத்தின் முன் அமைவது பெருமையும் பெருமிதமும் கொள்ளத்தக்கச் செய்தி ஆகும்.

திராவிடப் பேரியக்கத்தின் அரசியல் பிரிவு தி.மு.க. அது இளைஞர்களுக்கு 'திராவிட இயக்கத்தின் அரசியல் கல்வியை' புகட்டி வருகிறது. இன்னொரு பிரிவினர் 'திராவிடப் பள்ளியை' நடத்துகிறார்கள். தொடர்ந்து இளைஞர்கள் மொய்த்துக் கொண்டே இருக்கிறார்கள். கட்டுரையாளரான நாம் தி.மு.க. இளைஞர்களுக்கு ஒரு கோரிக்கையை முன் வைக்க விரும்புகின்றோம்.

திராவிட இயக்கம் பொதுவுடைமை கொள்கை வளருவதற்கு செய்த பணிகளின் முழுப் பரிமாணத்தையும் இக்கட்டுரையில் நாம் சொல்லவில்லை. ஆனால் அறிஞர் அண்ணா தமது கட்டுரையில் இரு ஆவணங்களைக் குறிப்பிடுகிறார் அல்லவா?

**(1) கம்யூனிஸ்ட் அறிக்கை**

**(2) கார்ல் மார்க்சின் கேப்பிடல்-மூலதனம்**

இந்த இரண்டை அறிஞர் அண்ணா படித்து தெளிவடைந்து 1932 இல் கட்டுரை எழுதினார். அப்போது அவருக்கு குறைவான தரவுகளே கிடைத்து இருக்கக் கூடும். இப்போது படிப்பவர்களுக்கு வசதிகள் நிரம்ப இருக்கின்றன. ஆகவே கூடுதலான செய்திகள் தி.மு.க. இளைஞர்களுக்கு அது பற்றிக் கிடைக்கக் கூடும்.

(1) கம்யூனிஸ்ட் அறிக்கையை - சமதர்ம அறிக்கை என்று பெரியாரின் குடி அரசு முதன் முதலில் வெளியிட்டது.

இரண்டாவதாக இஸ்மத்பாட்சாவின் மொழி பெயர்ப்பு வெளிவந்தது.

மூன்றாவதாக ரா.கிருஷ்ணையாவின் மொழிபெயர்ப்பு வெளிவந்தது.

நான்காவதாக இரா.ஜவகரின் மொழி பெயர்ப்பு - என்று நாம் படித்தோம்.

இதற்கெல்லாம் அடுத்து எஸ்.வி.இராஜதுரை கம்யூனிஸ்ட் அறிக்கைக்கு மிக நீண்ட விளக்கம் சிறப்புக்குரிய வகையில் எழுதியிருந்தார். சுமார் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அதை மிக அமைதியாக ஆழமாகப் படித்துப் பார்த்து 'காக்கை சிறகினிலே' இலக்கிய இதழில் எழுதினோம்.


கம்யூனிஸ்ட் அறிக்கையைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்காக எஸ்.வி.இராஜதுரை எழுதிய நூலை கைவிளக்காகக் கொள்ளுங்கள். கம்யூனிஸ்ட் அறிக்கை என்பது தலைப்பைப் பார்த்தவுடன் கட்சி அறிக்கைகள் போல என நினைத்து விடக் கூடாது. இவை மாமேதைகளான கார்ல் மார்க்சு, ஏங்கெல்சு எழுதியவை.

(2) 'கேப்பிட்டல்' என்ற சொல்லைத் தமிழில் 'மூலதனம்' என்றே ம.சிங்காரவேலரும், ப.ஜீவானந்தமும் அறிமுகப்படுத்தினர். இதைக்கொண்டு பன்மொழிப் புலவர் கா.அப்பாதுரையார் 'முதலீடு' என மூலதனத்தைப் பற்றி 48 பக்கங்களில் ஒரு சிறு நூலில் அதன் அறிமுகத்தை அளித்தார். இது கண்டிப்பாக போதுமானதாக இருக்க முடியாது.

(1) எத்தனையோ பெருமக்கள் மூலதனத்தைத் தமிழில் தர முயன்றனர். முடியவில்லை. 1980 களில் க.ரா.ஜமதக்னி மூலதனத்தைத் தமிழில் தந்தார். மிகை மதிப்பையும் உடன் வழங்கினார். ஆக கேப்பிட்டல் - மூலதனம், மிகை மதிப்பு தொகுப்போடு 6 தொகுதிகள் (பக்கங்கள் 5272)

(2) தியாகு மூலதனத்தை 5 தொகுதிகள் தந்தார். மிகை மதிப்பை அவர் மொழி பெயர்க்கவில்லை. (பக்கங்கள் 3225)

(3) சோதிப்பிரகாசம் 'முதல்' என்ற பெயரில்



மூலதனத்தின் முதல் தொகுதியின் சிறிய பகுதியான முதல் அதிகாரத்தை மட்டும் தமிழாக்கி இருக்கிறார்.

இந்த மூன்றில் எதை வேண்டுமானாலும் நீங்கள் படிக்கத் தொடங்கலாம். அதன் முழுமையை நோக்கிப் பயணிக்கலாம். மூலதனத்தில் முதல் அதிகாரம் முக்கியமானது. படிக்கத் தொடங்குங்கள். மார்க்சியத்தைப் பயிலத் தொடங்குங்கள். அது ஒரு பொருளாதார அரசியல் கல்வி, ஆனால் செயலூக்கம் உள்ளது. விஞ்ஞான பூர்வமானது.

முதல்வர்-கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இந்த பேரறிவிப்பால் கார்ல் மார்க்சின் சிலையை நிறுவ இருக்கிற இந்த நேரத்தில் அவரின் மூளை உழைப்பின் கனத்தை நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டும் என்பதால் நாம் இதனைச் சொல்ல வருகின்றோம்.

நம் தலைவர்களைக் கவர்ந்த மார்க்ஸின் பேரறிவு உலக மக்களுக்கு வழங்கிய செய்தி என்ன? - என்பதைத் தி.மு.க. இளைஞர்கள் அறிந்து கொள்ள (1) கம்யூனிஸ்ட் அறிக்கை (2) மூலதனம் ஆகிய இரண்டு ஆவணங்களை ஆங்கில மூலத்தோடு தமிழில் படித்துப் பாருங்கள். அதன் உள்ளடக்கத்தைப் பரக்கக் காணலாம். ஒரு புதிய 'பொன்னுலகத்தைக்' காண்பீர்கள்.

இது எளிதானல்ல. கடினமானதுதான். நமது தலைவர் ஸ்டாலின் நமது சிந்தனையைக் கிளர்ச்சித் துடிப்புக்கு உரிய தாக்கி இருக்கிறார். மேலே நாம் சொன்ன இரு ஆவணங்களைப் படிப்பதன் மூலம் மார்க்சின் மேதைமைத் தெரிய வரும். மார்க்சிய ஒளி எழும். இரண்டு மேதைகளின் அறிவின் மாட்சித் துலங்கக் காணலாம்.


வலதுசாரி சிந்தனைகளும் முதலாளித்துவமும் முற்றிப் பருத்து-பெருத்துவரும் வேளையில் மார்க்சியம் தன்னெழுச்சிப் பெறும். இதனை அறிய மார்க்சியத்தைப் பயில வேண்டும்; ஏனெனில் இது மக்களுக்கானது.

தலைவர் ஸ்டாலின் கார்ல் மார்க்சின் சிலைத் திறப்பு பேரறிவிப்பும் சிலைத் திறக்க இருக்கிற தருணமும் தி.மு.க. இளைஞர்களின் இடையே அறிவலையைத் திராவிட இயக்க மரபுப்படி எழுப்பி இருக்கிறது. உலக மாந்தரைத் தமிழகத்தின் திசையைப் பார்க்கச் செய்து இருக்கிறது. ●

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ. கோவிந்தசாமி
### மே 18 (1969)



மொழிப்போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1952ல் தி.மு.க. ஆதரவோடு போட்டியிட்டு விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரானார்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் முன்னணித் தலைவர்கள் அனைவரும் கைதாகி சிறை சென்றபோது, அண்ணா அவர்களால் கழக பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டவர்.

தி.மு.க. தொழிற்சங்கச் செயலாளராகப் பணியாற்றியவர்.

அண்ணா அவர்களின் நம்பிக்கைக்கு உரியவரானார். தலைவர் கலைஞரின் உற்ற நண்பராக விளங்கியவர்.

1967ல் அண்ணா அமைச்சரவையிலும், அண்ணா மறைவுக்குப் பிறகு தலைவர் கலைஞர் அமைச்சரவையிலும் பணியாற்றியவர்.

"கொள்கை குன்றம் கோவிந்தசாமி" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

20ம்தேதி - முன்னாள் அமைச்சர்

## பசும்பொன் தா.கிருட்டினனின் 22ஆவது ஆண்டு நினைவு தினம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மரியாதை!

*சிவகங்கை, மே 18 -*

*சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தாலுகா கொம்புக்காரனேந்தலில் பிறந்தவர் பசும்பொன் தா.கிருட்டினன். மாணவப்பருவம் முதல் கழக வளர்ச்சிக்காக தென் மாவட்டங்களில் அயராது பணியாற்றியவர். கழக அமைப்பு செயலாளர் மாவட்ட கழக செயலாளர் மற்றும் நாடாளுமன்றம், மேலவை உறுப்பினர் மற்றும் சிவகங்கை சட்டமன்ற உறுப்பினராகவும், மானாமதுரை ஒன்றிய குழு தலைவராகவும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சராகவும் இருந்தவர்.*

*இவர் கடந்த 20.5.2003 ம் ஆண்டு மறைவெய்தினார். அவரது நினைவிடம் மானாமதுரை தாலுகா கொம்புக் காரனேந்தலில் உள்ளது. ஆண்டு தோறும் சிவகங்கை மாவட்ட கழகம், பசும்பொன் தா.ரா. மற்றும் குடும்பத்தினர் சார்பில் மே மாதம் 20ம்தேதி மலரஞ்சலி செலுத்தி மரியாதை செலுத்தப்படுகிறது.*

*இதுகுறித்து மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறிஉள்ளதாவது.*

*இந்த ஆண்டு வருகிற 20ஆம் தேதி செவ்வாய்க் கிழமை பசும்பொன் தா. கிருட்டிணன் அவர்களின் 22வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கொம்புக்காரனேந்தலில் அவரது நினைவிடத்தில் எனது தலைமையில் மலரஞ்சலி மரியாதை செலுத்தப்படுகிறது.*

*இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.*

*இத்தகவலை மாவட்ட செயலாளர் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தி.சு. நல்லதம்பி
### மே 18 (2007)



கழகம் தோன்றிய காலத்திலிருந்து கழக உறுப்பினர்.

மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

1959ஆம் ஆண்டு சென்னை, எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்ற கழக மாநில மாநாட்டில் தொண்டர் படைத் தளபதியாக சிறப்புற பணியாற்றியவர்.

1959 முதல் 1974ஆம் ஆண்டு வரை தொடர்ந்து சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், பெரம்பூர் பகுதிக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

1977ல் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் பூங்கா நகர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**